# இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள்

**Based on GROUP-IV Examination syllabus -prepared by G.SRIRAM**

**NOTE: Dear kalam achievers kindly read at lest 4 to 5 times you can easily understand..**

**நிதி ஆயோக்** (NITI Aayog)

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி மத்திய திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டது. இந்தத் திட்டக் குழுவின் முதல் தலைவராக அப்போதைய பிரதமர் நேரு இருந்தார். இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையின்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு மத்திய திட்டக் குழுவை கலைத்துவிட்டு, **மாநிலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில்** புதிய குழு அமைக்கப்படும் என அறிவித்தார். இதன்படி 2015, சனவரி 1 ஆம் திகதி திட்டக் குழுவுக்குப் பதிலாக நிதி ஆயோக் என்ற புதிய அமைப்பு மத்திய அரசால் உருவாக்கப்பட்டது.

**நிதி ஆயோக்** (NITI Aayog) என்பது இந்தியாவின் மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்டுள்ள ஒரு குழுவாகும். இதில் *நிதி* (NITI - National Institution for Transforming India) என்பதன் பொருளாகும். இது 2015, சனவரி மாதம் 1ஆம் தேதியிலிருந்து செயல்பட துவங்கியுள்ளது. இதன் தற்போதைய துணைத் தலைவராக அரவிந்த் பனகாரியாஉள்ளார்.

இந்த அமைப்பின் தலைவராகப் பிரதமர் செயல்படுவார். துணைத் தலைவர் மற்றும் ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் பிரதமரால் நியமிக்கப்படுவார்கள்.

---

**1 முதலாம் ஐந்தாண்டுத் திட்டம்:(1951-1956)**

**2 இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-1961)**

**3 மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்(1961-1966)**

**4 நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்(1969-1974)**

**5 ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்(1974-1979)**

**6 ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-1985)**

**7 ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985-1989)**

**8 எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1992-1997)**

**9 ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் (1997-2002)**

**10 பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (2002-2007)**

**11 பதி◌ொனாராம் ஐந்தாண்டுத் திட்டம் (2007-2012)**

**12 பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டம் (2012-17)**

- **முதல் ஐந்தாண்டு திட்டம்1951 - 1956) ஹரார்டு டோமா மாதிரி திட்டம்**
  - முன்னுரிமை வேளாண்மை வளர்ச்சி (நீர்மின் திட்டம், நீர்ப்பாசன வசதிகளை பெருக்குதல்)
  - திட்டம் வெற்றியடைந்தது சமுதாய முன்னேற்ற திட்டம், குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டம் 1952ல் தொடங்கப்பட்டது.
- **இரண்டாம் ஐந்தாண்டு திட்டம்: (1956 - 1961) மஹலனோபிஸ் மாதிரி**
  - முன்னுரிமை, அடிப்படை மற்றும் கனரக தொழில்கள் வளர்ச்சி.
  - பிலாய், துர்காபூர், ரூர்கேலா இரும்பு எஃகு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன.
  - பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது
- **மூன்றாம் ஐந்தாண்டு திட்டம்: (1961 - 1966)**
  - முன்னுரிமை பெரும் இயந்திரங்களை நம் நாட்டிலேயே உருவாக்குதல்.
  - வேளாண்மையில் சுய தேவையைப் பூர்த்தி செய்தல்.
  - பாகிஸ்தான், சீனாவுடன் போர் மற்றும் பருவக்காற்று பொய்த்ததால் வறட்சி காரணமாக தோல்வி அடைந்து.
  - தானியங்களை பாதுகாப்போம் என்ற திட்டம் தொடங்கப் பட்டது - 1965.
  - பசுமை புரட்சி அறிமுகம் செய்யப்பட்டது (1965)
- **மூன்று ஓராண்டு திட்டங்கள் (1966 - 69)**
  - 1966 ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதால் ஏற்றுமதி அதிகரித்து, இறக்குமதி குறைந்தது
  - விலைவாசி குறைந்தது
- **நான்காம் ஐந்தாண்டு திட்டம்: (1969 - 1974)**
  - தற்சார்பு அடைதல், ஏற்றுமதி அதிகரித்தல்
  - நீதியுடன் கூடிய வளர்ச்சி
  - விஜய நகரம், சேலம், விசாகப்பட்டினம் இரும்பு எஃகு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டது.

- **ஐந்தாம் ஐந்தாண்டு திட்டம்: (1974 - 1979) Garibi Hatao**
  - வறுமையை ஒழித்தல் (கரீபி ஹட்டாவோ)
  - ஓராண்டு முன்னதாகவே 1978ல் ஜனதா அரசால் நிறுத்தப்பட்டது.
  - 20 அம்சத் திட்டம் (1975) அறிமுகப்படுத்தப்பட்டது
  - தேசிய குறைந்தபட்சத் தேவை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது

- **உருளல் திட்டம் (1978 - 80) Rolling Plan**
  - TRYSEM - 1979 தேசிய கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட்டது

- **ஆறாம் ஐந்தாண்டு திட்டம்: (1980 - 1985)**
  - ஏழ்மையை போக்க அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
  - தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம்
  - ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் (1980)
- **ஏழாம் ஐந்தாண்டு திட்டம்: (1985 - 1990)**
  - வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துதல்
  - ஜவஹர் ரோஜ்கார் யோஜனா (1989)
  - வேலைக்கு உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது
  - ஓராண்டு திட்டங்கள் (1990 - 1992)
- **எட்டாம் ஐந்தாண்டு திட்டம்: (1992 - 1997)**
  - நோக்கம்:

  1. மனித வள முன்னேற்றம்
  2. மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துதல்

  - மொத்த உள்நாட்டு உற்பத்தி, இலக்கை விட மிஞ்சியது
  - தாராளமயமாக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை செயல்படுத்தப்பட்டது.
- **ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம்: (1997 - 2002)**
  - சமுதாய நீதி மற்றும் சமத்துவத்துடன் ஆன வளர்ச்சி.
  - மக்கள் பங்கு பெறும் அமைப்புகளை (மகளிர் சுய உதவிக் குழு, கூட்டுறவுச் சங்கங்கள்) முன்னேறச் செய்தல்
- **பத்தாவது ஐந்தாண்டு திட்டம்: (2002 - 2007)**
  - எட்டு சதவீதம் வளர்ச்சியை எட்டுதல்

- ஓராண்டுக்கு 10 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்
- அனைவருக்கும் கல்வி அளித்தல்.
- புதுப்பிக்கப்பட்ட 20 அம்ச திட்டம் தொடங்கப்பட்டது.

❖ **பதினோறாவது ஐந்தாண்டு திட்டம்: (2007 - 2012)**

- வேளாண்மை வளர்ச்சி விகிதத்தை 4% ஆக உயர்த்துதல்
- 70 மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாக்குதல்
- குழந்தை இறப்பு விகிதம் 1/1000 மாக குறைத்தல்
- காடுகள் சதவீதம் 5% ஆக உயர்த்ததுல்
- அனைவருக்கும் சுத்தமான குடிநீர் அளித்தல்

**12 வது ஐந்தாண்டு திட்டம் ( 2012 - 2017 )** ***சராசரி வளர்ச்சி இலக்கு 8% ஆக நிர்ணயம்***

**12 வது ஐந்தாண்டு திட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

12 வது ஐந்தாண்டு திட்டத்தின் மொத்த செலவு ரூ 47.7 லட்சம் கோடி என்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

12 வது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாய துறையில் 4% வளர்ச்சி விகிதத்தை ஐந்து வருடத்தில் அடையவேண்டும் நிர்ணயத்தது.

வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் சதவிகிதம் 30% என்பதை, 10 சதவிதம் என்று குறைக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு வழங்கக்கூடிய மானியங்களை (விவசாயம், எரிவாயு, உணவு, முதலியன.,) நேரடியாக அவர்களுக்கு வழங்கலாம் என்ற முறையை அமல்படுத்துவது 12 வது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய திட்டம் ஆகும்.

சில முக்கிய திட்டங்கள் 12 வது ஐந்தாண்டு திட்டத்தில் கொண்டு வரப்பட்டன, அவைகள்

**விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி:**

விவசாயிகளுக்கு சிறந்த முறையில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய சந்தைகளை ஏற்ப்படுத்தி கொடுப்பது மற்றும் சேமிப்பு மற்றும் உணவு பதப்படுத்தும் சிறந்த உட்கட்டமைப்பு ஏற்ப்படுத்துவது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி விவசாய உற்பத்திய அதிகப்படுத்துவது. ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் முலம்

வன வளங்கள் மதிப்பீட்டு திட்டத்தின் முலம் காட்டின் வளங்களை வளர்ப்பது மற்றும் பழங்குடியினர் பகுதிகளை மேம்படுத்துவது.

**நீர்:**

நாட்டில் உள்ள நீர்நிலைகளை பாதுகாத்தல் மற்றும் அதன் வளங்கள் இந்த ஐந்தாண்டுகளில் மேம்படுத்துவது.

தேசிய நீர் ஆணைக்குழு அமைத்து அதன் முலம் நீர் வளங்கள் மற்றும் நீர் சம்பந்தமான முக்கிய திட்டங்களுக்கு முதலீட்டு செய்வதற்கு அனுமதி வழங்குவது போன்றது.

**தொழில் துறை:**

உற்பத்தி துறை பலவினமாக உள்ளது, அதனை மேம்படுத்த புதிய தொழிற்சாலை உருவாக்கி, புதிதாக ஆண்டு ஒன்றுக்கு 2 மில்லியன் கூடுதல் வேலைகள் உருவாக்குவது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் திட்டத்தின் முலம் சிறு மற்றும் குறு தொழில் செய்பவர்களுக்கு அரசு உதவி செய்வது.

மாநில அரசுகள் நல்ல உட்கட்டமைப்பு மற்றும் தொடர்புகள் உடன் உள்ள “சிறந்த தொழில்துறை பகுதிகளை உருவாக்குவது.

**கல்வி மற்றும் திறன் வளர்ப்பு:**

2017 ஆம் ஆண்டுக்குள் இரண்டாம் நிலை கல்வியை அனைவர்க்கும் சென்றடைய வேண்டும் என்று நிர்ணயக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வியில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை உக்கப்படுத்த தொழில் நிறுவங்கள் மற்றும் கல்வி நிறுவங்கள் இடையே தொடர்பு ஏற்ப்படுத்துவது.

**சுகாதார துறை:**

சுத்தமான குடிநீர், சுகாதாரம் மற்றும் சிறந்த ஊட்டச்சத்து, குழந்தை, முதலியன திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்ப்படுத்த தனி அமைச்சகம் அமைப்பது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது சிறப்பு கவனம் செலுத்துவது.

**ஐந்தாண்டு திட்டங்களும் அதன் முக்கிய நோக்கமும்**

1. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1951 - 1956**

☺முதல் ஐந்தாண்டு திட்டத்தை வகுத்தவர் - **ஹரோல்டு தோமர்**

☺நோக்கம் : **முக்கியத்துவம் தரப்பட்ட துறை விவசாயத்துறை.**

2. இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் காலம் - **1956 - 1961**

☺இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்தவர் **P.G.மஹல நாபிஸ்.**

☺நோக்கம் : **முக்கியத்துவம் தரப்பட்ட துறை தொழில் துறை.**

3. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1961 - 1966**

☺மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்தவர் - **P.G.மஹல நாபிஸ்.**

☺நோக்கம் : **தற்சார்பு திட்டம்**

4. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1969 - 1974**

☺நோக்கம் : **நிலையான வளர்ச்சி மற்றும் தன்னிறைவை**

5. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1974 - 1979**

☺நோக்கம் : **வறுமையை ஒழித்தல்**

6. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1980 - 1985**

☺நோக்கம் : **வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதன் மூலம் வறுமையை அகற்றுதல்**

7. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1985 - 1989**

☺நோக்கம் : **உணவு, வேலைவாய்ப்பு, உற்பத்தித் திறன், தற்சார்பு ஆகியவை பெருகுதல்**

8. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1992 - 1997**

☺நோக்கம் : **முழு வேலைவாய்ப்பு, தொடக்கக்கல்வி, மனிதவளமேம்பாடு, மக்கள் தொகை கட்டுப்பாடு, வேகமான பொருளாதார வளர்ச்சி**

9. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - **1997 - 2002**

☺நோக்கம் : **வேளாண்மை, கிராம வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் 2004க்குள் முழு கல்வி**

10. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் **- 2002 - 2007**

☺நோக்கம் : **நேரடி அந்நிய முதலீடு, தொழிலாளர் முன்னேற்றம், பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கிராம வளர்ச்சி**